# மரபுவழி நெல்லை மீட்டெடுத்த மாமனிதர் ‘நெல் ஜெயராமன்’

**பொ.நா. கமலா**

தமிழ்ப் பேராசிரியர்(பணிநிறைவு), எஸ். எ்ப். ஆர். மகளிர் கல்லூரி,
சிவகாசி– 626 189, தமிழ்நாடு, இந்தியா.

### முன்னுரை

திருவாரூர் மாவட்டம் கட்டிமேடு கிராமத்தில் ராமசாமி – முத்துலெட்சுமி இணையர்க்கு மூன்றாவது மகனாகப் பிறந்தவர் ஜெயராமன் (1967). மரபுவழி நெல்லை மீட்டெடுப்பது ஜெயராமனின் பொறுப்பு எனக் கூறி அவருக்கு ‘நெல் ஜெயராமன்’ எனப் பெயர் சூட்டியவர் இயற்கை வேளாண் விவசாயி நம்மாழ்வார். ஒன்பதாம் வகுப்பு வரை மட்டுமே பள்ளிக் கல்வி படித்திருந்த ஜெயராமன் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கும் சிறந்த வேளாண் அறிஞராக உருவானார். அத்துடன் நில்லாது நஞ்சில்லாத உணவை மக்கள் உண்ண வேண்டும் என்பதற்காகப் பாரம்பரிய நெல் வகைகள் 174-ஐ மீட்டெடுத்தார். நெல் ஜெயராமனின் மரபுவழி மீட்டெடுத்த செயல்பாடு குறித்து இக்கட்டுரை ஆய்ந்தறிகின்றது.



### நடைப்பயணமும் மரபுவழி நெல்கள் மீட்டெடுப்பும்

நம்மாழ்வார் தொடங்கிய பூம்புகார் முதல் கல்லணை வரையிலான நடைப் பயணத்தில் ஜெயராமன் கலந்து கொண்டார் வடுகூர் கிராமத்தைச் சேர்ந்த ஓய்வு பெற்ற தமிழாசிரியர் ராமகிருஷ்ணன், மறைந்து கொண்டிருந்த ‘காட்டு யானம்’ எனும் நெல்லை ஒரு பையில் கொடுத்து அதனை மீட்டெடுக்குமாறு வேண்டினார். அப்போதுதான் இருவர்க்கும் மரபுவழி நெல்வகைகளை மீட்டெடுக்க வேண்டும் எனும் சிந்தனை உதித்தது. வழியில் மேலும் ஏழு வகை நெல் கிடைத்தது. தன் சீடரான ‘நெல் ஜெயராமனி’டம் நம்மாழ்வார் மீட்டெடுக்கும் பொறுப்பை ஒப்படைத்தார்.

### பாரம்பரிய நெல் வகைகள்



தமிழகத்தில் வழக்கில் இருந்தவை பின்வரும் நெல்வகைகள் : பூங்கார், கருங்குறுவை, குள்ளக்கார், மட்டைக்கார், குழிவெடிச்சான், சேலம் சன்னா, தூயமல்லி,சிவப்புக் கவுணி, கருப்புக் கவுணி, மைசூர் மல்லி, கருடன் சம்பா, மாப்பிள்ளைச் சம்பா, காட்டு யானம், ஒட்டடையான், தேங்காய் பூ சம்பா, கிச்சடி சம்பா, அன்னமழகி, கார்வாடன் சம்பா, கொட்டாரச் சம்பா, இலுப்பைப்பூச் சம்பா எனப் பட்டியலிடுகிறார் ஜெயராமன். அவை பயன் தரும் காலத்தையும் தன் அனுபவத்தில் அறிந்து கூறியுள்ளார். அவற்றைப் பயிரிட்டு, நீர் பாய்ச்சி, காத்து, அறுவடை செய்யும் முறையினையும் கற்பித்தார்.

### மரபுவழி நெல் - மீட்டெடுப்பில் சிக்கல்கள்

முதியோர்கள், இன்னாரிடம் இன்னநெல் வகை உள்ளது எனக் குறிப்பிட்ட போதிலும், அன்னாரிடம் நேரில் சென்று பெறுவது ஜெயராமனுக்கு எளிதாக இல்லை. நாள் முழுவதும் பேசியபின் அவர்களிடமிருந்து கால் கிலோ நெல் மட்டுமே கிடைத்தது. மீண்டும் முதியோரிடம் அந்நெல்வகையின் அருமை, பெருமை, வளர்ச்சி, உண்ண ஏற்றதா என அறிந்தார். ஊர் ஊராக அலைந்து பல நெல்வகைகள் பற்றித் தெரிந்து கொண்டார்.

**மீட்டபின் செயல்பாடு**

மீட்ட நெல்வகைகளைத் தானே பரிசோதனை செய்தார். அதன் அபரிமிதமான வளர்ச்சி கண்டு வியந்து மக்களிடம் கொண்டு செல்ல முனைந்தார். மக்களுக்கு நம்பிக்கை ஊட்டி ஏற்குமாறு செய்தார்.

**மீட்டெடுப்பதில் உதவியோர்**

தஞ்சாவூரிலுள்ள இந்தியப் பயிர்ப்பதனத் தொழில்நுட்பக்கழக நண்பர், நெல்வகைகளின் சத்துக்களையும், தன்மைகளையும் பரிசோதித்து உதவினார். ஒடிசாவிலுள்ள மத்திய அரிசி ஆராய்ச்சி நிறுவன இயக்குநர் ரிச்சார்யா இந்தியாவிலுள்ள நெல் வகைகளைக் கொண்டு நாட்டு மாடுகளைப் பயன்படுத்தி வேளாண் புரட்சியைச் சாதிக்க முடியும் எனக் கூறி ஆதரவுக் கரம் நீட்டினார்.



(வடமாநிலத்தவர்களுடன் தமிழ்நாட்டு மரபுவழி நெல் பற்றிய கருத்துப் பரிமாற்றம்)

**வருங்காலத்தில் மீட்டெடுக்க வேண்டியவை**

ஜெயராமன் கருத்துப்படி வருங்காலத்தில் 500 நெல் வகைகளை மீட்டெடுக்க வேண்டியுள்ளது. தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில் 1000 வரை நெல் இருக்கக் கூடும். துணைவேந்தர் துணையுடன் அவற்றை வெளிக் கொண்டு வந்து மக்கள் பயன் பெறுமாறு செய்ய வேண்டும் என்பது ஜெயராமனின் தீரா ஆவல்.

**விளைச்சலில் இலக்கு**

ஜெயராமன் விவசாயிகள் குறைந்த செலவில் நிறைந்த விளைச்சல் காண வேண்டும் என விரும்பினார். எனவே அதிக மகசூல் கண்டவரான ஆலங்குடி பெருமாள் என்பவர் பயன்படுத்திய முறையைத் தன்னைச் சேர்ந்தவர்கள் பயன்படுத்துமாறு செய்தார். அவர்கள் கதிராமங்கலத்தில் தூயமல்லி கால் கிலோவை விதைத்து 4,170 கிலோ விளைச்சல் கண்டனர்.

**தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் மேற்கொள்ளல்**

ஜெயராமன் தாங்கள் மிகுதியாக விளைச்சல் கண்டதை எடுத்துக் கூறியபின்னரும், வேளாண் பல்கலைக்கழகத் துணை வேந்தர் முதலில் அதனை நம்பவில்லை. பின்னர் செயல்முறையில் காட்டச் செய்தார். 1 ஏக்கருக்கு 3800 கிலோ விளைச்சல் கண்டதாகத் துணைவேந்தர் சான்றிதழ் அளித்தார். பின்னர் பல்கலைக்கழகமும் இம்முறையை மேற்கொள்ளத் தொடங்கியது.

**பண்பாட்டில் நெல்லுக்குரிய இடம்**

உணவில் மட்டுமில்லாது, தமிழர் பண்பாட்டோடும் பின்னிப் பிணைந்தது நெல். திருமணத்திற்கு முன்பு மாப்பிள்ளைச் சம்பா, பின்பு கருப்புக் கவுணி, மகப்பேறு காலம் பூங்கார், குழந்தைப் பேறுக்குப் பின் பால்குடவாலை, ஆறுமாத உணவாக வாடன் சம்பா பயன்படுத்தப் பெறுகின்றன. கன்னியாகுமரியிலுள்ள அரசகுடும்பத்தினர் சமைப்பது கொட்டாரச் சம்பா.

குழந்தை பிறந்த 16ஆவது நாள் காப்பரிசி, இறந்த பின் வாய்க்கரிசி எனப் பிறப்பு முதல் இறப்பு வரை நெல்லுக்கு மனித வாழ்வில் இடம் உண்டு. வேளாண்மைச் சடங்குகளான பொங்கல், விதை முகூர்த்தம், நல்லேர் பூட்டுவது ஆகியவற்றில் நெல்லுக்குச் சிறப்பிடம் உண்டு.

**நெல்லும் மருத்துவக் குணமும்**

நெல் பற்றி எதைக் கேட்டாலும் கூறும் நடமாடும் கலைக்களஞ்சியமான நெல் ஜெயராமன் அவற்றின் மருத்துவக் குணத்தையும் அடுக்குகிறார். காய்ச்சல், ஒவ்வாமைக்கு இலுப்பைப் பூ அரிசிக் கஞ்சி, நீரிழிவு நோயாளிக்கு கருப்புக் கவுணி, மாப்பிள்ளைச் சம்பா, காட்டு யானம் என்ற நெல் வகைகள், புற்று நோயாளிக்குக் குள்ளங்கார் என்னும் அவர் கூற்றிலிருந்து நோயாளிகளுக்கு நோய்க்கேற்பச் சமைத்து அளிப்பது மரபாக இருந்துள்ளது தெரிகிறது.

**தேசிய அளவிலான நெல் திருவிழாக்கள்**

கேரளத்தைத் தலைமையகமாகக் கொண்ட கிரியேட் (CREATE) எனும் நிறுவனத்தின் அறங்காவலர் ஆர்.பொன்னம்பலம், ஜெயராமனின் பாரம்பரிய வேளாண்மையை மீட்டெடுக்கும் முயற்சிகளைப் பாராட்டியதோடு, ஆதிரெங்கம் கிராமத்தில் அவ்அமைப்பின் சார்பில் 2006 - இல் முதல்

நெல் திருவிழா கொண்டாடுமாறு செய்தார். அதில் 150 பேர் பங்கு பெற்றனர். 7 நெல் வகைகள் அவர்களுக்கு வழங்கப் பெற்றன. திருவிழாவில் முக்கியப் பொறுப்பேற்றவர் ஜெயராமன்.

நெல் திருவிழாக்களை ஒவ்வோர் ஆண்டும் மே மாதம் அவர் முன் நின்று நிகழ்த்தினார். தொடக்கத்தில் ஆந்திரா, கேரளா, கர்நாடக விவசாயிகள் வந்து பயன்பெற, பின்னர் ஒடிசா, வங்கம், பஞ்சாப்பிலிருந்தும் வரத் தொடங்கினர். பாரம்பரிய நெல்வகைகளை அத்திருவிழாவில் பரிமாற்றம் செய்து கொள்வது வழக்கமாயிற்று. 2017ஆம் ஆண்டு திருவிழா உச்ச கட்டத் திருவிழாவாக விளங்கியதோடு 41,000 விவசாயிகளுக்கு 174 நெல் வகைகள் வழங்கப்பெற்றன. பிற மாநிலத்தவரும் தத்தம் மாநிலத்தில் நெல் திருவிழாக்களைக் கொண்டாடுவாராயினர். இவ்வாண்டிலும் (2018) தமிழகத்தில் கொண்டாடப் பெற்றது.



(2018 தேசிய அளவிலான நெல் திருவிழாவில்)

### ஆக்கப்பூர்வமான செயல்பாடுகள்

காவிரி நீருக்காகவும், விதைகளை மரபணு மாற்றம் செய்வதற்கு எதிராகவும் போராடிய ஜெயராமன், நெல் வகைகளை மீட்டெடுக்க ஆக்கப்பூர்வமான செயல்களிலும் ஈடுபட்டார்.

### கருத்தரங்குகள்

பல கருத்தரங்குகளுக்கு ஜெயராமன் ஏற்பாடு செய்துள்ளார். அவற்றில் விவசாயிகள் தங்கள் அனுபவத்தைப் பரிமாறிக் கொள்ளச் செய்தார். இக்கருத்தரங்குகள், தகவல் தொழில் புரிந்த ஒரு புதிய கூட்டத்தை (IT) இளைஞர்கள், இளைஞிகளை இயற்கை வேளாண்மை நோக்கி இழுத்து வரச் செய்தன.

பிலிப்பைன்ஸில் நிகழ்ந்த கருத்தரங்கில் கலந்து கொண்டு ஜெயராமன் தன் அனுபவங்களைப் பார்வையாளர்களோடு பகிர்ந்து கொண்டார்.

### இயற்கை வேளாண்மை நூல்கள்

விவசாயிகளின் நலன் கருதி 'மாமருந்தாகும் பாரம்பரிய நெல்', 'நெல்லதிகாரம்', 'நெல்லுக்கிறைத்த நீர்' போன்ற நூல்களை இயற்றியுள்ளார்.

### நெல் மீட்டெடுப்பை இயக்கமாக்குதல்

'கிரியேட்' நிறுவனம் சார்பில் ஆதிரெங்கம் கிராமத்தில் 'இயற்கை வேளாண்மை ஆராய்ச்சி மையம்' நிறுவப் பெற்றது(2006). அதன் பயிற்சி இயக்குநராக ஜெயராமன் ஆனார். கடந்த 12 ஆண்டுகளாக 'நமது நெல்லைக் காப்போம்' இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளராகச் செயலாற்றி, ஊர் தோறும் விவசாயிகளிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி வந்தவர் ஜெயராமன். இவ்வராய்ச்சி மையமானது வேளாண் பல்கலைக்கழக மாணவர்களே பயிற்சி பெறும் அளவுக்குச் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. வேளாண் பல்கலைக் கழகமும் ஒத்துழைப்பை நல்கி வருகிறது.


(இயற்கை விஞ்ஞானி நம்மாழ்வர் அவர்களிடம் விருது பெறும் காட்சி)

### ஜெயராமன் பெற்ற விருதுகள்

தமிழகத்தின் விருதான 'சிறந்த இயற்கை வேளாண்மை செய்யும் விவசாயி' (Best Organic Farmer) எனும் விருதினைத் தொடர்ந்து இரு ஆண்டுகளாக (2012, 2013) ஜெயராமன் பெற்றார். தேசிய அடிப்படை நிலை கண்டுபிடிப்புக்குரிய (National Innovation Founder- NIF) பாரம்பரிய அறிவுக்கான விருதினை 2015 - இல் குடியரசுத் தலைவரிடமிருந்து பெற்றார். மத்திய அரசின் அறிவியல் தொழில் நுட்ப அமைச்சகம் சிருஷ்டி (SRISTI) அமைப்பின் இளம் காந்தியத் தொழில்நுட்பக் கண்டறிதலுக்கான 'சிருஷ்டி சம்மான்' விருதினை இவருக்கு வழங்கிப் பெருமைப்படுத்தியது.

**அரசிடம் வேண்டுகோள்**

அரசு, வேளாண்மை செய்யும் விவசாயிகளுக்கு அளிக்கும் மானியங்கள் நேரடியாக அவர்களுக்குப் போய்ச் சேருவதில்லை. மாறாக, விவசாயிகள் அல்லாதவர்களான வணிகர்கள் அவர்கள் பெயரைச் சொல்லிப் பெறுகின்றனர். அரசு விவசாயிகளுக்கு நேரடியாக ஏக்கருக்கு ரூ.3000/- அளித்தால் அவர்கள் நன்மை பெறுவர் என்பது ஜெயராமன் கருத்து. மேலும் விவசாயிகள் வறட்சி, வெள்ளத்தால் பாதிக்கப்படும்போது அரசு உதவ முன் வர வேண்டும் என்பன அவர் வேண்டுகோள்களாம்.



( மத்திய அரசின் விருது பெறும் காட்சி )

**நிறைவுரை**

தன் இறுதி மூச்சுவரை விதை நெல் ஒவ்வொன்றிலும் தன் முத்திரையைப் பதித்துவிட்டுத் தான் பிறந்த மண்ணுக்கு வழங்கிய அம்மாமேதை, அதன் வளர்ச்சி கண்டு மகிழ விண்ணை நோக்கிப் பறந்து சென்ற நாள் 06.12.2018.

இன்னும் 500 பாரம்பரிய நெல் வகைகளையேனும் மீட்டெடுக்க வேண்டும் எனும் அவரது தீராத விழைவினை நிறைவேற்றும் கடமை இளைய வேளாண் சமுதாயத்திடம் உள்ளது. மாநில அரசும், மைய அரசும் அதனை உணர்ந்து உதவினால் 'நஞ்சில்லாத உணவு' மக்களுக்குக் கிடைக்கும்.

## NEL JAYARAMAN : THE GREAT MAN WHO REVIVED AND PRESERVED TRADITIONAL PADDY VARIETIES

**P.N. Kamala**

Mr.Jayaraman was born as a third son to parents Ramasamy and Muthulakshmi in Kattimedu village in Tiruvarur District in 1967. Renowned organic agricultural scientist Nammazhvaar ordered him to take up the task of reviving and preserving the traditional paddy varieties and called him by the name Nel Jayaraman. Being just a school dropout at IX standard, he had managed to revive and preserve 174 traditional paddy varieties once used by the tamil people. During a rally, a retired tamil teacher Mr.Ramakrishnan, requested Nammazhvaar gave him seeds of a paddy variety called KaatuYanam and asked him to revive and preserve it. On his journey he collected 7 more such varieties of paddy and at this point he joined hands with Jayaraman to revive such varieties of paddy. Jayaraman has documented many varieties of paddy such as Poongar, Karunguruvai, Kunnakkar, Mattaikaar, Salem Sanna, Thooyamalli, Red Kavuni, Black Kavuni, Mysore Malli and the list goes on. He did not achieve his goal easily since there was lot of inhibitions and hesitations among villagers and they gave him very less seeds due to lack of awareness. He personally experimented with the traditional varieties of paddy seeds, studied their diversity, and analysed their potential to withstand climate variations. Some friends from Indian Agricultural Preservation Centre, Tanjore and Mr.Richarya, Director of Indian Paddy Research Centre, Odisha helped him in using Organic farming methods to revive and preserve the traditional Indian native paddy varieties.